**OS.NO. 46/2014 DW-1**

நாள் : 09.09.2024

பெயர் : கோகுல்

த/பெ : பூபாலன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -

இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தும் உங்களுக்கு தெரியும் என்றால் ஆமாம். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் 243எ/3 என்றால் ஆமாம். இந்த வழக்கில் வழக்கு சொத்து உங்களுடையது என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தின் சர்வே எண் 243/எ2 வில் சொத்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி கேட்டால் அந்த சர்வே எண் தான் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது செக்குபந்தி விவரங்கள் சரியாக உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் 243எ/3 இல்லை என்றால் ஆமாம்.

மேற்படி சர்வே எண் 15.12.1941 ஆவணத்தில் உள்ளது என்றால் சின்னபோடி என்பவர் கிரய ஆவணத்தை ஏற்படுத்தியபோதே சர்வே எண் தவறாக அதே சமயம் செக்குபந்தி சரியாக குறிப்பிட்டு மாணிக்கம்மாளுக்கு கிரய ஆவணம் செய்துள்ளார். மாணிக்கம்மாள் பெயருக்கு 1941 கிரயத்திற்கு பிறகு வருவாய் ஆவணங்கள் பட்டா மற்றும் சிட்டா மாற்றப்பட்டுள்ளது என்றால் அது அவர்களை தான் கேட்க வேண்டும். மாணிக்கம்மாள் கிரய ஆவணத்தில் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் இல்லை, அவர்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை.

07.08.1947 சின்னம்மாளுக்கு மாணிக்கம்மாள் கிரயம் செய்த ஆவணத்தில் சர்வே எண் 243எ/2 என்று தான் கண்டுள்ளது என்றால் ஆமாம் ஆனால் செக்குபந்தி மற்றும் அனுபவம் சரியாக தான் உள்ளது. மூன்று கிரய ஆவணங்களிலும் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1987 ஆம் வருடம் சின்னம்மாள் பூபாலனுக்கு சொத்தை கிரயம் செய்துள்ளார் மேற்சொன்ன சின்னம்மாள் மற்றும் பூபாலன் சர்வே எண் தவறாக உள்ளது என்பதை குறித்து எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் செக்குபந்தி சரியாக இருந்த காரணத்தால் அவர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

உங்கள் அப்பா பூபாலன் 1987 ல் சின்னம்மாளிடம் இருந்து சொத்தை கிரயம் வாங்கும் முன்னர் சிட்டா அடங்கல் உள்ளிட்ட ஆவணங்களை வாங்கி பார்த்தாரா என்றால் இல்லை, சொத்து எங்கள் அனுபவத்தில் இருந்ததால் நாங்கள் அதில் கவனம் செலுத்தவில்லை. 24.07.1987 ஆவணத்திலும் சொத்தின் சர்வே எண் 243எ/2 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் ஆனால் செக்குபந்தி சரியாக தான் உள்ளது. பூபாலனுக்கு இரண்டு பிள்ளைகள் மூத்தவர் என் அண்ணன் கோபி, மற்றும் நான் ஆகியோர் தான் அவருக்கு வாரிசுகள் ஆவோம். என் அண்ணன் கோபிக்கு இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் அவர் மனைவி ஆகியோர் உள்ளார்கள்.

உங்கள் சகோதர்களுக்குகள் பாகபிரிவினை எதுவும் நடந்ததா என்றால் இல்லை. உங்கள் அப்பா பெயரில் வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட சர்வே எண்ணில் சிட்டா மற்றும் அடங்கல் உள்ளதா அதை வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை அது குறித்து தான் பிரச்சனையே. 1987 கிரயத்திற்கு பிறகு வழக்கு சொத்து சம்மந்தப்பட்டு உங்கள் அப்பா அவர் பெயரில் பட்டா வாங்கீனாரா

என்றால் இல்லை. உங்கள் அப்பா கிரயம் பெற்ற பிறகு பட்டா மாற்றம் செய்ததற்காக மனு எதுவும் தாக்கல் செய்தாரா அந்த ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உங்கள் அப்பா எப்போது காலம் ஆனார் என்றால் சரியாக நினைவில்லை. உங்கள் அப்பா இறக்குவரை சொத்திற்கு உண்டான பட்டா குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- *********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.